யிருக்கிறார்கள். பொதுவாக கிளீனராக இருப்பவர்கள் தான் பிறகு ஓட்டுநர்களாக வருகிறார்கள் மிகவும் ஏழ்மையானவர்கள் தான் இந்தத் தொழிலுக்கே வருகிறார்கள். இது கன்கரண்ட் லிஸ்ட்டில் வருகிறது. ஆகவே மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் இந்தக் கல்வித் தகுதி என்ற சிரமத்தைப் போக்குவதற்கு ஒரு நிர்வாக உத்தரவை இடவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். கல்வித் தகுதி என்பது, எம்.எல.ஏ.-வாக வருவதற்கும் எம்.பி.-யாக வருவதற்கும் அரசியல் சட்டத்திலேயே வைக்கப்படவில்லை. நான்ஒரு குறையாகச் இதைச் சொல்லவில்லை. ஆகவே இந்தச்சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இந்தப் பிரச்சினை வராமல் அரசு பாதுகாக்க வேண்டு மென்ற நிலையில் நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் மதுரைக்குச் சென்றிருந்த நேரத்தில், தமிழ் நாடு ஓட்டுநர்கள் சங்கத்தின் சார்பில் என்னிடத்தில் இதைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே ஏழை ஓட்டுநர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்ட இந்தப் பிரச்சினை ஏற்கெனவே அரசினுடைய கவனத் திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. குறைந்தபட்சக் கல்வித் தகுதி இவ்வளவுதான் வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல் ஏற்கெனவே ஓட்டுவதற்கான வேறு பல தகுதிகளை அடிப்படை யாக வைத்து, நிச்சயமாக இந்த அரசு இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஔ) மின் கட்டணம் பற்றிப் புதிதாகப் போடப்பட்டுள்ள ஆணை குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மின் துறை அனுப்பியுள்ள ஒரு அதிர்ச்சி தரும் ஆணையைப்பற்றி நான் இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு தொடர்புடைய அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை.

(ஃ) ஆலந்தூர் தொகுதியில் அமைக்கப்பட வேண்டிய சுரங்கப் பாதைகள் குறித்து .

திரு. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியில் பல ஆண்டு காலமாக நங்கநல்லூர், பரங்கிமலை பகுதியில் இரண்டு சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட முடியாத நிலையில், மக்கள் அவதிக்கு ஆளாகி இருப்பதால், அவற்றைச் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

1989 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அந்த இரண்டு சுரங்கப் பாதைகளையும் கட்டுவதாக அறிவித்தார்களே தவிர, ஆளுநர் ஆட்சியில் அடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. காரணம் நிலம் கையகப்படுத்தப்படாமலேயே டெண்டர் விடப்பட்டது. அப்படி டெண்டர் விடப்பட்டால், அந்த காண்ட்ராக்டர்கள் அதற்கான நஷ்ட ஈடு கோரி வழக்குப் போடுவார்கள். எனவே நிலத்தைத் தரமாட்டோம் என்று பலர் நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தார்கள். அது நிலத்தைக் கையகப் படுத்தத் தடையாக இருந்தது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு கையகப்படுத்தும் பணியில் ஈடுபட்டு, அந்த வழக்கையும் அவர்கள் வாபஸ் பெற்றிருக்கிறார்கள். நிலத்தைக் கையகப் படுத்தும் பணியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. எனவே இந்த அரசு உடனடியாக பழைய நிலையிலேயே சுரங்கப் பாதையை அமைப் பதற்கான வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சென்ற வாரத்தில் உத்தரவிட்டிருக்கிறது. நிலம் கையகப் படுத்திய பிறகு டெண்டர்கள் விடப்பட்டு எவ்வளவு விரைவாக அந்த வேலையை முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்கும்.

(ஔ) மின்கட்டணம் பற்றிப் புதிதாகப் போடப்பட்டுள்ள ஆணை குறித்து—தொடர்ச்சி-

11-05 மணி

திரு. குமரி அனந்தன் : மதிப்புமிகு சபாநாயகர் அவர்களே, தடங்கலுக்கு வருந்தி ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். மின்துறையிலே இருந்து வந்திருக்கின்ற ஆணையைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மின்துறை அமைச்சர் அவர் களும் இங்கே வருகை தந்து இருக்கிறார்கள். இப்போது ஒரு எண்ணுள்ள கட்டடத்தின் கீழ்ப் பகுதி அல்லது முன்பகுதியில் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டு மேல்பகுதியிலோ அல்லது பின்பகுதியிலோ தாங்கள் குடியிருந்து வருகிறார்கள். அதனால் இரண்டுவிதமான மின் இணைப்புகள் அவர்களுக்குக் கிடைக்கும். உதாரணத்திற்குச் சொல்லப்போனால் வீட்டிற்கு என்று தனி 'லைட் டாரிஃப்' அதாவது தனி மின் கட்டணம் யூனிட்டுக்கு 50 பைசா என்றும், கடை என்று சொன்னால் ஒரு ரூபாய் முப்பத் தைந்து பைசா என்றும், தொழிற்சாலைகள் என்றால் 95 பைசா என்றும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சிலர் ஒரே வீட்டிலேகூட மூன்றையும் வைத்து மூன்று இணைப்புகளைப் பெற்றிருப் பார்கள். அதன்படி அதற்குரிய கட்டணம் மட்டுமே செலுத்து வார்கள். ஆனால் இப்போது டிசம்பர் மாதத்திலிருந்து ஒரேஒரு இணைப்புத்தான் கொடுக்கப்படும் என்று அவர்களுக்கு மின்சாரஇலாக்கா ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது அதாவது ஒருவர் கடை வைத்திருந்து குடியும் இருப்பாரேயானால் அவரிடத் திலே கடைக்குரிய கட்டணத்தை மின் இலாக்கா வசூலித்தால் எப்படி சரியாக இருக்கும்? குடியிருக்கிற வீட்டிற்கும்,